2024-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 27-ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொருள் எண் .1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் செப்டம்பர் 2024 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.173 நாள்.27.09..2024.**

பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண். 2**

பள்ளிபாளையம் நகராட்சியில் செப்டம்பர் மாதம் **25.09.2024–**ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண். | வரியின விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 0.00 | 221.76 | 0.00 | 48.87 | 0.00 | 172.89 |
| 2. | காலியிட வரி | 2.02 | 4.09 | 1.63 | 1.13 | 0.40 | 2.96 |
| 3. | தொழில்வரி | 0.83 | 17.57 | 0.83 | 5.21 | 0.00 | 12.35 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 0.00 | 71.65 | 0.00 | 15.72 | 0.00 | 55.94 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 18.29 | 0.00 | 9.72 | 0.00 | 8.57 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.00 | 49.27 | 0.00 | 9.86 | 0.00 | 39.42 |
| | **மொத்தம்** | **2.85** | **382.64** | **2.46** | **90.50** | **0.40** | **292.13** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/அ1

**தீர்மான எண்.174 நாள்.27.09..2024.**

பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண். 3**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி சனிசந்தை பகுதி சமுதாயக்கூடம் வளாகம் சுற்றியுள்ள பகுதிக்கு கலைஞர் திடல் என பெயர் சூட்டவும், இருபுறமும் உள்ள நுழைவுவாயிலில் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு நகராட்சி சார்பாக அமைப்பதற்கு அரசின் அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டதில் அரசு முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடித எண்.6486/ந.நி-5(2)/2024-1 நாள்.12.09.2024 ல் நகர்மன்றத்தில் தீர்மானம் வைக்க அனுமதி அளித்துள்ளனர். எனவே, சனிசந்தை பகுதி சமுதாயக்கூடம் வளாகம் சுற்றியுள்ள பகுதிக்கு கலைஞர் திடல் என பெயர் சூட்டவும், இருபுறமும் உள்ள நுழைவுவாயிலில் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு நகராட்சி சார்பாக அமைப்பதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.175 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் .4**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சியில் பணிபுரியும் குடிநீர் பிரிவு பணியாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், களப்பணி உதவியாளர், அலுவலக உதவியாளர்கள், ஒட்டுநர்கள் மற்றும் பொதுசுகாதார ஆண்/பெண் தூய்மை பணியாளர்கள் ஆகியோர்களுக்கு ஒவ்வொரு வருடமும் தீபாவளி பண்டிகைக்கு, அரசாணையின்படி 2 ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையக்கூலி உட்பட அனைத்தும் அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான கோ ஆப் டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2024 –ஆம் ஆண்டிற்கான மேலே தெரிவிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு சீருடைகள் மற்றும் தையற்கூலிகள் வழங்கவும், அதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச தோராய மதீப்பீட்டு தொகை ரூ.1,50,000/-ஆகும் எனவும், மேற்காணும், செலவின தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2024-ம் ஆண்டிற்கு தீபாவளி பண்டிகைக்கு, அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதின்படி, இந்நகராட்சியில் பணிபுரியம் குடிநீர் பிரிவு பணியாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், களப்பணி உதவியாளர், அலுவலக உதவியாளர்கள், ஒட்டுநர் மற்றும் பொதுசுகாதார ஆண்/பெண் தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சீருடைகளை அரசு சார்ந்த சார்பு நிறுவனமான கோ- ஆப் டெக்ஸ், ஈரோடு என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யவும், அதற்கான தையக்கூலி வழங்கவும், ரூ.1,50,000/-க்குள் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.176 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.5**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் கீழ்கண்ட ஐந்து அங்கன்வாடி மையங்களில் பழுது பணி மற்றும் புதிய கட்டிடங்கள் கட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், பள்ளிபாளையம் அவர்கள் கோரிக்கை வழங்கியதை தொடர்ந்து, இப்பணிகளை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. கொளத்துக்காடு
2. பள்ளிபாளையம் அக்ரஹாரம்
3. அம்மன் நகர்
4. டி.வி.எஸ்.மேடு
5. மாதாபுரம்

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.177 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.6**

பள்ளிபாளையம் நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் நகராட்சி மற்றும் நகராட்சியினை ஒட்டியுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள (9 பள்ளிகள்) 1 முதல் 5 ம் வகுப்பு பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சர் காலை சிற்றுண்டி விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. இதன்படி, ஆவாரங்காடு, கண்டிப்புதுார், நாட்டாகவுண்டன்புதுார் ஆகிய பகுதிகளில் உள்ள 3 நகராட்சி துவக்கப்பள்ளிகள் மற்றும் ஆலாம்பாளையம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட 6 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகலான ஆயக்காட்டூர், அலமேடு, தொட்டிபாளையம், அன்னைசத்யா நகர், சின்னாகவுண்டம்பாளையம், காவேரி ஆர்.எஸ். என மொத்தம் 9 பள்ளிகளில் பயின்று வரும் 1190 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி அக்டோபர்

2024 மாதத்துடன் முடிவடையவுள்ளதால், நவம்பர் 2024 மாதம் முதல் அக்டோபர் 2025 வரை ஒரு வருட காலத்திற்கு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.178 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.7**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 வாய்க்கால் ரோடு மற்றும் வார்டு எண் 21 காமராஜ் நகர் மற்றும் பெரியகாடு PSK பட்டறை அருகில் ஆகிய மூன்று இடங்களிலும் புதியதாக தெருவிளக்கு அமைக்க ஒருமுனை மின்இணைப்பு பெறுவதற்கும், இப்பணிக்கான செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்..

**தீர்மான எண்.179 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.8**

பள்ளிபாளையம் நகராட்சியில் சென்னை கன்னியாகுமரி திட்டத்தின் கீழ் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியின் காரணமாக சேலம்-நாமக்கல்-திருச்செங்கோடு-ராசிபுரம் செல்லும் பேருந்துகளுக்காக காத்திருக்கும் பயனாளிகளுக்கான இரண்டு நிழற்கூடங்கள் அப்புறப்படுத்தப்பட்டது. தற்போது பாலம் கட்டுமானப் பணி நிறைவடைந்துள்ளதால் பள்ளிபாளையம் ரவுண்டான பகுதியில் ராஜவீதி பிரிவு (ஐயங்கார் பேக்கரி முன்புறம்) மற்றும் பழைய போலீஸ் ஸ்டேசன் பிரிவு அருகில் ஒரு நிழற்கூடம் மற்றும் ஈரோடு மார்க்கமாக செல்லும் பேருந்துகளுக்கு திலகம் பெட்ரோல் பங்க் அருகில் ஒரு நிழற்கூடம் என மூன்று இடங்களில் அமைக்க நகராட்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் கூட்டு ஆய்வில் இடம் தேர்வுசெய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று இடங்களில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பேருந்து நிறுத்தம் கட்டுவதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.180 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.9**

பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் RICOH IM C2000 கொள்முதல் செய்யப்பட்டு 5 வருடங்களுக்கு மேல் ஆகிறது. தற்போது பிரிண்டரில் உள்ள கருப்பு நிறத்தின் டெவலப்மெண்ட் யூனிட் (Development Unit) பழுதாகி உள்ளதை புதியதாக மாற்றம் செய்திடவும், சிறுசிறு பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளது. பிரிண்டரில் உள்ள பழுதுகளை சரிசெய்ய கிராபிடெக் இமேஜினி சொல்யூசன்ஸ், கரூர் என்ற நிறுவனத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் பிரிண்டரினை சரிசெய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.24,000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மூன்று விலைப்புள்ளிகள் 19.09.2024-ல் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ்,<br>28/1, ராமகிருஷ்ணாபுரம் வடக்கு,சிட்ரா எதிர்புறம், கரூர்-639 001. | **24,000/–** |
| 2) | சி.எஸ்.இன்போடெக்,<br>7/D/E-O, 79-N , ராமகிருஷ்ணாபுரம் மேற்கு,கரூர்-639001 | **24,350/–** |
| 3) | இன்-சைனிக்,<br>172/3, ராமலிங்கம் ரோடு மேற்கு,ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-641 002. | **25050/–** |

**அலுவலகக்குறிப்பு**

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ், கரூர் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை பொதுநிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.656 /2024/இ1

**தீர்மான எண்.181 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும் 1383 எண்ணிக்கை தெருவிளக்குகள் நகராட்சி மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்போது பயன்பாட்டில் இருந்து வரும் அனைத்து தெருவிளக்குகளும் LED டியூப் லைட்டுகளாக மாற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து வரப்பெற்ற சுற்றறிக்கையில் அனைத்து நகராட்சிகளிலும் தெருவிளக்குகளை LED Conversion மூலம் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை அனுப்பக் கோரப்பட்டது. அச்சமயத்தில் பள்ளிபாளையம் நகராட்சியில் அனைத்து தெருவிளக்குகளும் LED டியூப் லைட்டுகளாக மாற்றப்பட்டுள்ளதால், Energy Saving LED Conversion அவசியம் ஏற்படவில்லை என சமர்பிக்கப்பட்டது. ஆனால் தற்போது மின்கட்டணத்தினை கருத்தில் கொண்டு LED Tube light களுக்கு மாற்றாக அனைத்து தெருவிளக்குகளையும் Energy Saving LED Street Light Fittings களாக மாற்ற அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.182 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

பள்ளிபாளையம் நகராட்சியில் பொறியியல் பிரிவு, பொதுசுகாதார பிரிவுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN 34 MB 5688 புதிய ஜே.சி.பி வாகனத்திற்கு முதல் சர்வீஸ் செய்ய வேண்டியிருப்பதால், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட வாகனத்திற்கு சர்வீஸ் பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s. சூரியபாலா எர்த் மூவர், ஈரோடு நிறுவனத்தின் மூலம் பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்ட வகையில் செலவினம் ரூ.4000/-ஐ மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பார்வையிடலாம்.**

**கோப்பு எண்.1142/2024/இ1**

**தீர்மான எண்.183 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.12**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளுக்கு புதிய மற்றும் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 4 மின் மோட்டார்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 4 மின்மோட்டார்களை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் 1 மின்பணியாளர் கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் தலைமை நீரேற்று நிலைய மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க கடினமானதாக உள்ளது. மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கவும், மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் 6 பேரை ஒப்பந்த முறையில் நியமித்திடவும், நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள பயோ கேஸ் பிளாண்டினை பராமரிக்க ஒப்பந்த முறையில் 3 பணியாளர்களை கொண்டு பராமரிப்பு செய்யும் பணிக்கு நகர்மன்ற அனுமதி பெற்று திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.34638/2022/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை அல்லது மூன்று மாதங்களுக்கு (அக்டோபர் 2024 முதல் டிசம்பர் 2024 வரை) ஏற்கனவே திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற ஒப்பந்ததாரர் அவர் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.8,80,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2153/2024/இ1

**தீர்மான எண்.184 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.13**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளிலும் உள்ள மொத்தம் 1393 தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் நிரந்தர மின்பணியாளர் ஒருவர் மட்டுமே பணியாற்றி வருவதால், அனைத்து தெருவிளக்குகளையும் பராமரிக்க இயலாமல் பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் இரண்டு மின் பணியாளர்களை நியமிக்கவும், நகராட்சிக்கு சொந்தமான மினி எர்த் மூவர் ( JCB) வாகனத்தினை இயக்க ஒரு ஓட்டுநரை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணிகள் செய்வதற்கு நகர்மன்ற அனுமதி பெற்று திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.34638/2022/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை அல்லது மூன்று மாதங்களுக்கு (அக்டோபர் 2024 முதல் டிசம்பர் 2024 வரை) ஏற்கனவே திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற ஒப்பந்ததாரர் அவர் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.3,75,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2149/2023/இ1

**தீர்மான எண்.185 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.14</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் 7 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஒரே ஒரு குடிநீர் திறப்பாளர் பணியிடம் மட்டுமே உள்ள நிலையில், 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்க 6 மாத காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணியாளர்களை நியமித்து பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பணிக்கு நகர்மன்ற அனுமதி பெற்று திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.34638/2022/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை அல்லது மூன்று மாதங்களுக்கு (அக்டோபர் 2024 முதல் டிசம்பர் 2024 வரை) ஏற்கனவே திருவாளர்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற ஒப்பந்ததாரர் அவர் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.3,05,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1978/2024/இ1

**தீர்மான எண்.186 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.15</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து செல்லும் குழாய் பராமரிப்பு பணி, குடிநீர் பகிர்மானக் குழாய் பழுது பராமரிப்பு பணி, கழிப்பிடங்களில் உள்ள குழாய் பராமரிப்பு பணி போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில், தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்சொன்ன பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். எனவே, ஆழ்துளைக் கிணறு மூலமாக தண்ணீர் விநியோகம் செய்ய பயன்படும் குழாய் பராமரிப்பு, கழிப்பிடக் குழாய், பகிர்மானக் குழாய் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் 6 மாத காலத்திற்கு பணியாளர்களை கொண்டு பணிமேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதி பெற்று திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.34638/2022/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை அல்லது மூன்று மாதங்களுக்கு (அக்டோபர் 2024 முதல் டிசம்பர் 2024 வரை) ஏற்கனவே திருவாளர்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற ஒப்பந்ததாரர் அவர் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.8,10,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2157/2024/இ1

**தீர்மான எண்.187 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.16</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத்துறையினர் மூலமாக சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தில் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பாலத்திற்கு

என அமைக்கப்பட்டுள்ள கான்கீரிட் தூண்களுக்கு இடையே சங்ககிரி சாலையில் பசுமை பார்மஸி எதிர்புறம் உள்ள காலியிடத்தினை ஆட்டோ நிறுத்தம் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடங்களாக நகராட்சி மூலமாக பயன்படுத்தி பராமரிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1037/2024/இ1

**தீர்மான எண்.188 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.17</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் நகராட்சி ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள TN 77 R 6798 ஈப்பு வாகனம் ஆயில் சர்வீஸ், AC பில்டர் மாற்றுதல், வீல் அலைமெண்ட், ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்றுதல், வைபர் பிளேடு மாற்றுதல், நான்கு டயர் புதியது மாற்றுதல் மற்றும் இதர சிறு பழுதுகள் சரிசெய்யப்பட வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மேற்கண்ட வாகனத்திற்க்கு சர்வீஸ் பணிகளை அங்கீகரிக்கப்பட்ட M/s.எஸ்.கே.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட், சேலம் நிறுவனத்தின் மூலம் பணிகளை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டதற்கான செலவினம் ரூ. 52000/-ஐ மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிடலாம்.

கோப்புஎண்.1141/2024/இ1

**தீர்மான எண்.189 நாள்.27.09..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.18</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வரியில்லா இனம் ( பொது கழிப்பிடம் ) மாதாபுரம் ஆண்கள் / பெண்கள் கழிப்பிடம் (ம) பெரியக்காடு காமராஜ் நகர் பெண்கள் கழிப்பிடம் மூன்று ஆண்டுகளுக்கு 01.04.2024 முதல் 31.03.2027 வரை பொது ஏல அறிவிப்பு 14.03.2024, 12.07.2024, 13.08.2024, 12.09.2024 4 தேதிகளில் நடைபெற்றது. தினசரி நாளிதழ் மற்றும் ஒலி பெருக்கி மூலம் பொது மக்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டும் நான்கு தேதிகளில் பொது ஏலம் விடப்பட்டத்தில் ஏலம் கேட்டு ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. இந்த மூன்று கழிப்பிடங்களும் சமுதாயத்திற்கு உட்பட்ட கழிப்பிடமாக உள்ளது. அந்த பகுதியில் உள்ள சமுதாய மக்கள் கட்டணம் செலுத்தி உபயோகபடுத்த முன்வரவில்லை. இதனால் ஏலம் எடுக்கப்படவில்லை என்று தெரியவருகிறது. மேலும் சமுதாய கழிப்பிடத்தை இலாப நோக்கத்துடன் பார்க்காமல் சேவை அடிப்படையில் அப்பகுதி மக்கள் கட்டணம் இல்லாமல் உபயோகபடுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

சமுதாய மக்களுக்காக சேவை அடிப்படையில் கட்டணம் இல்லாமல் உபயோகப்படுத்துவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண்.190 நாள்.27.09..2024.**

அங்கீகரிக்கப்பட்டது,

**(ஓம்) மோ.செல்வராஜ்,**
**தலைவர்,**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**